# ஞாபகம் வருதே.... ஞாபகம் வருதே....

நம் அனைவருக்குமே பள்ளிப் பருவ நாட்களை நினைத்தவுடனே மனதில் ஒரு சந்தோசமான உணர்வு ஏற்படும். ஏனக்கு இப்போது ஏற்படும் மகிழ்ச்சி படிக்கும் நாட்களில் இல்லை.

மூன்று பக்கம் குன்றுகளாலும் ஒரு பக்கம் நிலத்தாலும் சூழப்பட்ட எங்கள் ஊரில் உள்ள ஒரு தொடக்கப்பள்ளியில் முதல் வகுப்பில் சேர்ந்தேன். அந்தப் பள்ளியின் முன்னாள் தலைமையாசிரியர் எனது தாத்தா. எங்கள் தாத்தாவின் மேல் இருந்த மரியாதை கலந்த பயம் காரணமாக, என்னையும்,எனது அண்ணனையும் ஆசிரியர்கள் கண்டு கொள்வதேயில்லை. எதற்கு வம்பு, நாம் ஏதாவது சொல்லி அவங்க தாத்தாவை ஏன் கோபப்படுத்த வேண்டும் என்று நினைத்து,எங்களை அழையாத வீட்டுக்குச் சென்ற விருந்தாளிகளாக எங்களை நடத்துவர்.

என்னுடைய முதல் வகுப்பு டீச்சர் எனது தங்கம் ஆச்சி. எனக்கு ரொம்ப செல்லம். எப்படியெனில் நான் வகுப்பிற்குச் சென்று கொஞ்ச நேரம் உட்கார்ந்திருப்பேன். பின் வகுப்பிலேயே தூங்கிவிடுவேன். முழிப்பு வந்தவுடனே பள்ளிக்கு வெளியே இருக்கும் அடிகுழாயில் தண்ணீர்அடித்து முகத்தைக் கழுவி வருவேன். இடைவேளை மணி அடித்துவிடுவார்கள். நேராக ஆச்சியிடம் சென்றால் காசு தருவார்கள். அதற்கு தின்பண்டம் வாங்கி சாப்பிடுவேன். இவ்வளவுதான் எனது முதல் வகுப்பு அனுபவம். எவ்வளவுதான் யோசித்தாலும் முதல் வகுப்பில் என்ன படித்தேன் என்பதே என் நினைவிற்கு வரவில்லை.

என்னையும் இரண்டாம் வகுப்பிற்கு அனுப்பினார்கள். இரண்டாம் வகுப்பு டீச்சருக்கு என் தாத்தாவென்றால் சிம்ம சொப்பனம். அங்கும் எதுவும் படித்த ஞாபகம் இல்லை. என் அம்மா வந்து, இவளுக்கு அனா,ஆவனாவே தெரியலையே என்று புகார் சொன்னவுடன், உங்க பொண்ணுக்கு இன்னும் மழலையே மாறவில்லை என்று என் மேல் பழியைத் திருப்பிவிட்டார்கள்.

பார்த்தார்கள் என்னுடைய தாத்தா. இங்கு படித்தால் பேரனும், பேத்தியும் சரிவரமாட்டார்கள் என்று நினைத்து அடுத்த வருடம் நான்கு கிலோ மீட்டர் துாரத்திலுள்ள பக்கத்து ஊரில் இருந்த தாத்தாவுடைய நண்பரின் ஆரம்பப் பள்ளியில் என்னை மூன்றாவது வகுப்பிலும், என் அண்ணனை ஐந்தாவது வகுப்பிலும் சேர்த்தார்கள். அங்கு என்ன மாயம் போட்டார்களோ, மந்திரம் போட்டார்களோ தெரியவில்லை. அ, ஆ தெரியாத நானும், ஏபிசிடி தெரியாத அண்ணனும் (பத்தாம் வகுப்புப் பொதுத் தேர்வில் அறிவியலில் மாவட்டத்திலே முதல் மதிப்பெண்) எப்படி படிப்பாளிகளாய் மாறினோம் என்பது இன்றும் புரியாத புதிர். அண்ணனாவது பெரிய பையன், நான் சின்னப்பெண்ணாகத்தான் இருப்பேன். பேருந்தின் படியில் கையில் ஒரு பையுடன் ஏறவே சிரமப்படுவேன். இப்படிப் பச்சப் புள்ளய பஸ்ஸில் அனுப்புறியே என்று சின்ன ஆச்சி அம்மாவை வைவார்கள். எங்கம்மா அதற்கெல்லாம் கவலைப்படவில்லை. வெற்றிகரமாகவே மூன்றாம் வகுப்பை முடித்தேன்.

என் அண்ணனுடைய ஆறாம் வகுப்பிற்காக இன்னும் ஏழு கிலோமீட்டர் தள்ளியிருந்த ஊரில் அண்ணனைச் சேர்க்கும் போது என்னையும் நான்காவது வகுப்புக்கு பள்ளி மாற்ற வேண்டியய கட்டாயம். டீசி வாங்கச் சென்றபோது டீச்சர் என்னைக் கட்டிப் பிடித்துக் கொண்டு, எனது தாத்தாவிடம் இவள் இங்கேயே படிக்கட்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். டீச்சர் குண்டாக இருந்ததால் எனக்கு மூச்சுமுட்ட, எப்போதடா விடுவார்கள் என்றெண்ணியபடியே டீச்சரின் கைகளுக்குள் அடங்கியிருந்தேன். சின்னப் பெண், தனியாக வரனுமே, அதனாலதான் அண்ணன் கூட அனுப்புகிறோம் என்று சொல்லி டீச்சரை சமாதானப்படுத்தி என்னை அழைத்துச் சென்றார்கள்.

சேர்ந்தாயிற்று புது பள்ளியில். முந்தின பள்ளியில் நான் முக்கியமான ஆள். புது பள்ளியில் பத்தோடு பதினொன்றாக இருந்தாக வேண்டிய கட்டாயம். முந்தின பள்ளியில் சேர்ந்த அன்றே இங்கே வா, இங்கே வா என்று கூப்பிட்டு உட்கார இடம் கொடுத்தார்கள். ஆனால் புது பள்ளியில் என்னைச் சீண்டுவாரில்லை. நானே போய் வகுப்பறையின் ஒரு ஓரத்தில் உட்கார்ந்து கொண்டேன். புது பள்ளியில் முதல் அனுபவமே மனதிற்கு உவப்பாக இல்லாததால், எனக்கு இந்த பள்ளி பிடிக்கவில்லை என்று

தாத்தாவிடம் கூறியதற்கு தாத்தா என்னைச் சமாதானப்படுத்தினார்கள். அதன் பின்னர் நண்பர்கள் கிடைத்தவுடன் கவலையில்லாமல் என்னுடைய படிப்பு சென்றது.

ஐந்தாம் வகுப்புக்கும் வந்துவிட்டேன். ஆந்த வகுப்பு டீச்சர் கண்டிப்புக்குப் பேர் போனவர்கள். அந்த வகுப்பில்தான் நான் மக்கர் செய்ய ஆரம்பித்தேன். எனக்குப் பிடிக்காத வேலை எழுதுகிற வேலை. ஆனால் டீச்சர் தினமும் வீட்டுப்பாடம் தருவார்கள். எவ்வளவு நாள்தான் எழுதவில்லையென்று அடிவாங்குவது. அதற்காக திருந்தி நான் வீட்டுப்பாடம் எழுத ஆரம்பித்துவிட்டேன் என்று நினைக்காதீர்கள். என் அம்மாவிடம் சென்று, எனக்கு கூடை பின்னச் சொல்லித் தாங்கம்மா, எனக்குப் பள்ளிக்குச் செல்லவே பிடிக்கவில்லை என்று சொன்னவுடன், நன்றாக என்னைக் **கவனித்து** பள்ளிக்கு அனுப்பிவிட்டார்கள். வேறு வழியில்லாமல் பள்ளிக்குச் செல்லத் தொடங்கினேன். வீட்டுப்பாடம் எழுதுவதின் மேல் இருந்த வெறுப்பு மட்டும் இன்றைய பெட்ரோல், டீசல் விலை போல் ஒவ்வொரு நாளும் ஏறுமுகமாகவே இருந்தது. ஆனால் வகுப்பில் நான் படிக்கிற பெண் என்ற பேரை மட்டும் கொஞ்சம் தக்க வைத்துக் கொண்டேன். ஒரு நாள் வெறுப்பின் அளவு எல்லை தாண்ட பள்ளிக்குச் செல்கிறேன் என்று கிளம்பி பள்ளிக்குப் போகாமல், பள்ளியிருக்கும் ஊரின் பஸ் ஸ்டாப்பிலே நின்று கொண்டேன். எங்கள் ஊரில் எங்கும் செல்ல முடியாது. தாத்தா, அம்மாவைத் தெரியாதவர்கள் ஊரில் யாரும் இல்லை என்பதால் எனக்குப் பிரச்சினைதான் உருவாகும் என்று புத்திசாலித்தனமாக சிந்தித்து, பள்ளியிருக்கும் ஊரின் பஸ் ஸ்டாப்பில் இருந்த தூங்குமூஞ்சி மரத்துக்குத் துணையாக நானும் நின்று கொண்டேன். எங்கள் ஊர் பஸ் வந்தால் மட்டும் மரத்துக்குப் பின்னாடி ஒளிந்து கொள்வேன். இப்படியாக ஒரு முழுநாளும் சாப்பாடு, தண்ணியில்லாமல் இருந்தவுடன் எனக்கு தூங்குமூஞ்சி மரத்தினடியில் எனக்கு ஞானோதயம் ஏற்பட்டது. என்னவென்றால், இனிமேல் வீட்டுப்பாடத்தை ஒழுங்காக எழுதிவிடுவது என்றுதான். கஷ்டப்பட்டு வந்த ஞானோதயமும் இரு வாரங்களில் பிரசவ நேர வைராக்கியம் போல் பிசுபிசுத்துப் போனது. ஒரு வழியாக ஐந்தாம் வகுப்பையும் முடித்தேன்.

ஆதன் பிறகு ஆறாம் வகுப்பில் படிக்கும்போது பள்ளிக்குச் செல்ல வேண்டாம் என்ற எண்ணம் ஏற்பட்டதேயில்லை. பள்ளிக்கே லீவு விடவேண்டும் என்று ஒவ்வொரு நாளும் வேண்ட ஆரம்பித்தேன். அதற்குக் காரணமுண்டு. ஒரு நாளில் பள்ளி வழிபாட்டுக் கூட்டத்தில் நிற்கும்போது, பள்ளியின் தாளாளர் இறந்துவிட்டதால் இன்று விடுமுறை என்று கூறி வீட்டுக்கு அனுப்பிவிட்டார்கள். அன்றிலிருந்து பள்ளிக்குச் செல்வதில் சுணக்கம் ஏற்படும் போதெல்லாம் யாருக்காவது ஏதாவது நடந்து, லீவு விடமாட்டார்களா என்று எண்ண ஆரம்பித்தேன். இது எண்ணமாக மட்டுமில்லாமல் பேச்சாகவும் வெளிப்பட்டுவிட்டது. அதாவது பஸ்ஸில் பள்ளிக்குச் செல்லும்போது சித்தி ஒருவர் எங்களுடன் வருவார்கள். அவர்கள் எங்கள் பள்ளி கிடையாது. பஸ்ஸில் மட்டும் சந்தித்துக் கொள்வோம். அவர்களிடம், எங்கள் பள்ளியில் இன்றைக்கு யாராவது இறந்துவிட்டால் நன்றாக இருக்கும் (இப்போது நினைக்கும்போது வேதனையாக உள்ளது) எங்களுக்கு லீவு கிடைக்கும் சித்தி என்று சொல்லிவிட்டு நான் பள்ளிக்கு வந்துவிட்டேன். அன்றே ஒரு ஆசிரியர் பைக்கில் பள்ளிக்கு வரும் போது சாலையோரத்தில் போடப்பட்ட செங்கல் சூளையின் புகையினால் கண் எரிச்சலால் எதிரில் வரும் வாகனத்தின் மீது மோதி உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு பலனில்லாமல் அன்று மாலையே உயிரிழந்தார். அன்று 3.30 மணிக்கு பள்ளி விட்டார்கள். என் அம்மா, எங்கள் சின்ன ஆச்சி வீட்டில் இறந்த ஆசிரியரைப் பற்றி பேசும்பொழுது அங்கிருந்த சித்தி, நான் காலையில் சித்தியிடம் பேசிய அனைத்தையும் சொல்லிவிட்டார்கள். அம்மாவிற்கு வந்ததே கோபம் என்னை அடிப் பின்னிவிட்டார்கள். அன்று முதல் யாருக்காவது ஏதாவது நடக்கவேண்டும் என்று நினைக்கக் கூடமாட்டேன். அடுத்து வந்த நாட்களில் படிப்பதில் குறை வைக்கமாட்டேன். ஆனால் எழுதுவதில் முழுவதும் குறையே. பரீட்சையில்கூட பதில் கொஞ்சமாக இருக்கிற கேள்விகளைத்தான் எழுதுவதற்கு நான் தேர்வு செய்வேன்.

எப்படியோ பத்தாம் வகுப்பை 421 மார்க்கோடு நிறைவு செய்தேன். பதினொன்றாம் வகுப்பில் கணக்குப் பிரிவு எடுத்தால்தான் மரியாதை. ஆனால் எங்க செட்டோட நல்ல நேரமோ,கெட்ட நேரமோ தெரியவில்லை. பத்தாம் வகுப்பு தேறியவர்களில் பாதிக்கு மேல் கணக்குப் பிரிவு வேண்டுமென்று கூற, எங்கள் பள்ளி வரலாற்றிலேயே முதன் முறையாக பதினொன்றாம் வகுப்பிற்கு நுழைவுத் தேர்வு நடத்தினார்கள். அதில் நான் சரியாக எழுதவில்லையென்றலாலும் அச்சமயத்தில் பள்ளித் தாளாளராக

இருந்த பெரியப்பாவின் முயற்சியால் எனக்குக் கணக்குப் பிரிவு கிடைத்தேவிட்டது. பதினொன்றாம் வகுப்புக்கு வந்தவுடன் பாரதியாரின் பக்கத்து வீட்டுப் பெண்ணாக மாறி கணக்குடன் பிணக்குக் கொண்டேன். கணக்கில் மட்டும் ஜஸ்ட் பாஸ் மார்க் வாங்கியே பதினொன்றாம் வகுப்பை முடித்தேன்.

பனிரெண்டாம் வகுப்பில் அடியெடுத்து வைத்து, ஏதோ வீட்டுக்குப் புகார் செல்லாத வகையில் படித்துக் கொண்டிருந்தேன். படிப்பு, தேர்வு, மதிப்பெண் என்று கண்ணுக்கெட்டிய தூரம் வரையில் வறட்சியாகவே இருந்தது. அப்பொழுதுதான் என்னுடைய வறண்ட உலகிற்கு வயதான, உடல்நலமில்லாத என் அப்பாமை ( அப்பாவின் அம்மா) மழையாக வந்தார்.(அப்பொழுது அப்படித்தான் நினைத்தேன்). என் அப்பாமைக்கு ஏதாவது ஒன்று என்றால் ஒரு வாரம் எடுக்க வேண்டும் என் அம்மா சொல்லியிருந்தார்கள். எனக்குத்தான் லீவு எந்த ருபத்தில் வந்தாலும் பிடிக்கமே. நானும் சந்தோசத்தில் இருந்தேன். மறுநாள் காலை 6 மணிக்கு அப்பாமையைப் பார்க்கச் சென்ற அம்மா, அங்கிருந்தவாறே தொலைபேசியில், இன்றைக்குத் தாங்காது அதனால் லீவு லெட்டர் எழுதிவிடு, நான் போய்க் கொடுத்துவிடுகிறேன் என்று சொன்ன மறுநிமிடமே லெட்டர் தயாராகிவிட்டது. அம்மாவும் லெட்டரை பெரியப்பாவிடம் கொடுத்துவிட்டு மீண்டும் அப்பாமையைப் பார்க்கச் சென்றால், அப்பாமைக்கு உடல்நிலை சரியாகிவிட்டதுமல்லாமல், நன்றாக பேசவும் ஆரம்பித்துவிட்டார்கள். மீண்டும் அம்மா போன் செய்து பள்ளிக்குச் செல்லுங்கள் என்று கூறிவிட்டார்கள். நான் அம்மாவிடம் லீவு லெட்டர் கொடுத்தாச்சும்மா. அதற்காகவது லீவு எடுத்துக்கிறேன்மா என்று சொல்லியும் கேளாமல் பள்ளிக்குச் சென்றேயாக வேண்டும் என்று முடிவாக சொல்லிவிட்டார்கள். கைக்கு எட்டுனது வாய்க்கு எட்டலையே என்ற விரக்தியுடன் பள்ளிக்குச் சென்றேன். இறந்துவிட்டார்கள் என்று லீவு லெட்டர் கொடுத்துவிட்டு இப்போது சரியாகிவிட்டார்கள் என்று வகுப்பாசிரியரிடம் கூறி வகுப்பிற்குச் சென்றேன்.

பள்ளி நாட்கள் என்றவுடனே எவ்வளவோ மகிழ்ச்சியான தருணங்கள் இருந்தாலும் இவையே என் நினைவில் முதல் வரிசையில் அணிவகுத்து நிற்கின்றன. அப்பப்பப்பா! இந்த பள்ளிக்காலம் சீக்கிரம் முடிய வேண்டுமென்ற எண்ணத்தோடே பனிரெண்டாம் வகுப்பையும் சொல்லிக்கொள்ளும் மார்க்கோடே முடித்தேன்.

ஆனால் கடவுள் எனக்குக் கொடுத்த வேலை ஆசிரியர் வேலை. வகுப்பில் ரொம்ப சேட்டை பண்ணுகிற பையனை அடக்குவதற்கு அவனுக்கு ஒரு பொறுப்பினை ஆசிரியர் கொடுப்பார். அதேபோல்தான் என் நிலைமையும். ஆனாலும் இதில் நல்ல விசயம் என்னவென்றால் படிக்கும்போது பிள்ளைகளின் மனநிலை எப்படி இருக்குமென்று நானும் அனுபவித்து உணர்ந்திருப்பதினால் அவர்களுக்கு ஏற்றபடியே என்னை நான் உருவாக்கிக்கொர்ணடிருக்கிறேன்

இப்படியாக என் பள்ளி அனுபவம் அடுத்த இன்னிங்சில் நுழைந்துள்ளது.